செட்டியாபத்து ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் பிறப்பிப்பவர்: க. பாலமுருகன்

அனுமதி எண்: 1/2024-2025

நாள்: 26-06-2024

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம்- தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம்- உடன்குடி ஊராட்சி ஒன்றியம், செட்டியாபத்து கிராமம் சர்வே எண்: 11/5B, 59/1, 465/9, 465/4A2, 465/4B, 11/3A1B1, 11/4B1A ல் ச.மீ 8335.76 (2 ஏக்கர் 6 செண்டு) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனை பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1) நகர் ஊரமைப்பு தூத்துக்குடி மாவட்ட துணை இயக்குனர் அவர்களின் நடவடிக்கைகள் 55ZJX0D4/THOOTHUKUDI//2024/TCP நாள் 20-06-2024

2) சாலை உள்ளாட்சிக்கான இடம் மற்றும் மின்வாரியத்திற்கான இடத்திற்கான ஒப்படைப்பு தானப்பத்திர எண் 1801/2024, 1799/2024 நாள்:14-06-2024.

3) மனுதாரர் திரு. சுயம்புராஜ் விண்ணப்பம் நாள்: 14-06-2024

(மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் துணை இயக்குனர் தூத்துக்குடி அவர்களுக்கு முகவரியிட்டது)

4) ஊராட்சி தீர்மான பதிவேடு.

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம் - திருச்செந்தூர் வட்டம் - உடன்குடி ஊராட்சி ஒன்றியம் மற்றும் செட்டியாபத்து கிராம சர்வே எண் 11/5B, 59/1, 465/9, 465/4A2, 465/4B, 11/3A1B1, 11/4B1A ல் ச.மீ 8335.76 (2 ஏக்கர் 6 செண்டு) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனை பிரிவுக்கு பார்வை (1) ல் கண்டுள்ளபடி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் மனை பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை (4) ல் கண்ட தீர்மான எண் 166 நாள்: 26-06-2024 ன்படி அங்கீகரிக்கபட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கீழ்காணும் பொது நிபந்தனைகளுடன் இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

1. மேற்காணும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும். இதில் எவ்வித விதிமீறலும் அனுமதிக்கப்படாது.
2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதி உள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம்
3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.
4. மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட நுழைவாயில் 6*4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்க வேண்டும்.
6. பார்வை 1-ல் கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் இந்த மனை பிரிவுகளுக்கு பொருந்தும்.

தலைவர்
செட்டியாபத்து ஊராட்சி

இணைப்பு:

சர்வே எண்: 11/5B, 59/1, 465/9, 465/4A2, 465/4B, 11/3A1B1, 11/4B1A ல்
செட்டியாபத்து கிராமத்தில் அமையும்
குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் -1 எண்ணிக்கை

பெறுநர்:

திரு சுயம்பு ராஜ்
5 /70, கோடாவிளை
காரைசுத்து நவலடி
திசையன்விளை

நகல்:

1. சார்பதிவாளர் அவர்கள் உடன்குடி அலுவலகம்
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் - தூத்துக்குடி
3. தூத்துக்குடி மாவட்ட அலுவலகம் தூத்துக்குடி - 2
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)
5. செட்டியாபத்து ஊராட்சி இருப்பு கோப்பு.